காலங்கிநாதர் அருளிய

# பூஜாவிதி 85

## காப்பு

ஆதியிலே அமைந்த விதியெழுத்துனாலே
அருள் பெருகும் திருமூலர் பாதம் போற்றி
நீதியுடன் பூசைவிதி தன்னை மைந்தா
நேர்மையுடன் கைமுறையாய் பாடுதற்கு
போதமென்னும் ஞான பூரணமே காப்பு
பூரணமாய் நின்ற மனோமணியே காப்பு
சோதியெனுங் கருணைவிழி வரக் கண்ணான
சுந்தரமாய் நின்றகணபதி காப்பாமே.

# நூல்

ஆமப்பா பூசைவிதி மார்க்கந் தன்னை
அன்பு வைத்து கைமுறைகள் அதிகம் சொன்னேன்
ஓமப்பா கைமுறைகள் அதிகம் சொன்னேன்
உண்மையுள்ள பூசையது நுணுக்கமெத்த
வாமப்பா லகிரியினால் சித்தர்கூடி
வந்தார்கள் திருமூலர் பாதந்தன்னில்
சோமப்பா லுண்டுவந்த கெதியைப் பார்த்து
தொழுதுநின்ற காரணமே தென்றார் பாரே.

என்றமொழி தன்னைஅறிந்து சித்தரெல்லாம்
என்குருவே பூசைவிதி முறைகள் எப்படி
அண்டர் பதந் தெரிவதற்குச் சமமாக
அன்புவைத்துச் சொல்லென்று அடி பணிந்தார்
நின்று பாதம் பணிந்தவகை யறிந்து கொண்டு
நேமமுடன் பூசாவிதி சுருக்கமாக
கண்டுகொண்ட வகையறிந்து சொன்னேனப்போ
கயிலாச சித்தரெல்லாம் வணங்கினாரே.

வணக்கமுடன் பூசைவிதி சுருக்கமாக
வகையுடனே சொன்னவகை தன்னைக் கேளு
இணக்கமுடன் மூலமதில் வாசியூட்டி
ஏகாந்த ருத்திரரைக் கண்டு போற்றி
தனக்குறுதியான ரவிமதியைக் கண்டு
சதாசிவ மனோன்மணியைத் தியானம் செய்து
எனக்குறுதி உனதுபதம் தாயேயென்று
ஏகாந்தமாகவே நீ இருந்து கொள்ளே.

இருந்து கொண்டு நவகோணம் நன்றாய்ச் செய்து
ஏகாந்த நவகோணந் தன்னிலே தான்
வருந்தினதோர் அக்ஷரத்தைச் சொல்லக் கேளு
மறுக்காதே அய்யுங் கிலியும் சவ்வென்றேதான்
அருந்தவமாய் சிவாயநம அஞ்சுங் கூட்டி
ஆக அஞ்சும் மூன்றுமடா எட்டு ஆச்சு
விரிந்ததொரு எட்டெழுத்து எண்கோணத்தில்
விபரமுடன் தானெழுதி நடுவே கேளு.

கேளப்பா நடுவான முக்கோணத்தில்
கெணிதமுடன் விந்தெழுதி விந்துக்குள்ளே
சூழப்பா ஓங்காரம்நடுவில் போட்டு
சுழித்த நடுச் சுழியெழுதி உயிருமடக்
காரப்பா கட்டான நவகோணந்தான்
கருணையுள்ள நவக்கிரகமென்று போகும்
மேலப்பா நவக்கிரக மேலாகத்தான்
விந்துவென்று வளையமது மூன்று போடே.

போடப்பா முதல்வளையம் இதழ்தானெட்டு
புகழன்னம் குவளையம் பதினாறாகும்
நாட்டப்பா அதின்மேலே இருபத்தேழு
நன்மையுள்ள இதழ் ஐம்பத்தொன்றுமாச்சு
தேடப்பா இதழ் ஐம்பத்தொன்றிலேதான்
திருவான அட்சரத்தை செப்பக் கேளு
சூடப்பா அட்சரந்தான் ஐம்பத்தொன்று மாச்சு
சுத்தமுடன் தானெழுதி இன்னம் கேளே.

கேளடா நாலுவாசல் கோட்டைக் கட்டி
கிருபையுள்ள பஞ்சகரத்திற் காவலர்
கேளடா அட்சரத்தைத் தியானம் பண்ணி
சிவகிளை உண்டாக செபமே செய்து
கேளடா சக்கரந்தான் உறுதியாச்சு
கிருபையுள்ள நவக்கிரகமான வீடு
கேளடா அவ்வீட்டிற் கெதிரேதான்
கிருபையுள்ள ரசிதமேர்க்கும்பம் வையே.

பாரப்பா கும்பமதில் நூலணிந்து
பக்தியுடன் கங்கை பூரணமாய் விட்டு
தேரப்பா மாங்குலையும் தேங்காய் சாத்தி
சிவசிவா நாலாயிரமும் சபாதணிந்து
சேரப்பா அக்ஷதையும் அதனில் சாத்தி
திருவிருந்த கும்பமதை மைந்தா கேளு
நேரப்பா பச்சரி நிறுத்தி மைந்தா
நேர்மையுள்ள கும்பமதை வைத்துக் கொள்ளே.

கேளப்பா கழஞ்சி தங்கமதைத் தகடாய்தட்டிக்
கெட்டியாய் அதனிலொரு விந்துபோட்டு
கேளப்பா விந்துவதின் நடுவிலேதான்
கிருபையுடன் நீங்கா அஞ்சு சுழியுஞ் சாத்தி
கேளப்பா அத்தகட்டைக் கையிலேந்தி
கிருபையுடன் சிவசிவாவென்று மைந்தா
கேளப்பா கும்பமதில் உள்ளே போட்டு
கணபதியை மஞ்சளினால் அருகு சாத்தே.

சாத்தியதோர் கணபதிக்குச் சந்தனம் புட்பம்
சாத்தி நன்றாய் கும்பமதன் அருகே வைத்து
மூர்த்திகரமாய் ஆவதற்கு மைந்தா கேளு
முக்தி தரும் அக்ஷதையும் ஓமென்று சாத்தி
பார்த்திபனே சுழிமுனையில் மனக்கண் வைத்து
உறுதியுடன் வாசியினால் மூலத் தேகி
ஆத்துமத்துக் குயிரான குருவைப் போற்றி
அமுர்த ரசவர்க்கமுடன் பால் பழமும் வையே.

வையப்பா தாம்பூலம் கமல மீதில்
மார்க்கமுடன் வசீகரமென்று மைந்தா
கையால்தா னெடுத்து முன்னே வைத்து
கருணை பெற அக்ஷதையும் மலர்கள் வாரி
மெய்யப்பா ஓம் சிவ சிவா வென்றேதான்
விருப்பமுடன் அர்ச்சனைகள் செய்து கொண்டு
செய்யப்பா தேங்காயும் பலிகொடுத்து
சிந்தை மனது ஒன்றாக அறிவில் நில்லே.

அறிவான மனதுடனே சிமசிம வென்று
அப்பனே தூபமுடன் தீபங் காட்டி
குறியுடனே உபசாரம் செய்து கொண்டு
குணமாக மணியோசை சங்கினோசை
விரிவான சேகண்டி ஓசை செய்து
மெத்தவமாய் புத்தியுடன் மைந்தா நின்றால்
நெரியான புருவ நடுச் சுழியைப் பார்த்து
நின்றி லங்கும் கற்பூரந் தீபந்தானே.

தானான தீபமோடு சிலம்பினோசை
    தன்னகத்தில் காணுமடா உண்மையாக
கோனான பஞ்சகர்த்தர் சித்தியோடு
    குணமாக வசனிப்பார் முன்னே நின்று
தேனான அமுர்தரசம் ஈவாள் மைந்தா
    செம்மையுடன் அவள் பதத்தைப் பூசை செய்து
வானான தேகமடா முக்தியாக
    உறுதியுடன் வாசியினால் மூலம் பாரே.

பாரப்பா வாசியினல் மூலம் பார்த்து
    பத்தி கொண்டு ருத்திரனார் பதியிற் சென்று
நேரப்பா பூரணமாய் மலர்க்கண் சாத்தி
    நின்றிலங்கு சுழிமுனையை நீ தான் பாரு
மேரப்பா அண்டரண்ட பதங்கள் தானும்
    மேன்புறச் சிவயோகத்தில் இருந்து கொண்டு
காரப்பா கண்டமதில் அங்கென்றூணி
    கருணையுடன் சடாக்ஷரத்தை அறிவாய் ஓதே.

ஓதுவது சடாக்ஷரந்தான் என்ன வென்றால்
    உண்மையுடன் சொல்லுகிறேன் நன்றாய் கேளு
ஓதுவது ஓம் சிவாய நம வென்று
    உண்மையுடன் நூத்தியெட்டு உருவே செய்து
ஓதுவது புருவ நடுக் கமல மீதில்
    உருக்கான வாசிமலர் கலந்து சாற்றி
ஓதுவது பூரணமே தாயே வென்று
    உண்மையுடன் தோத்திரங்கள் உகந்து செய்யே.

உகந்து நின்ற தோத்திரங்கள் செய்தாயாகில்
உண்மையுள்ள நவக்கிரகங்களும் உறுதியாமே
அகம் தெளிந்து நவக்கிரகம் தன்னில் நின்று
அன்புடனே நவக்கிரகம் பூசை செய்தால்
ஜெகந்தெளிந்து திருவருளைக் காணலாகும்
சிவசிவாசிவ பூசைக் கோடியாகும்
முகந் தெளிந்த குருபரனைக் காணலாகும்
முக்தி யென்ற வாசியினால் யோகம் பாரே.

பாரப்பா சிவயோகத்தில் இருந்து கொண்டு
பக்தியுடன் நவக்கிரகப் பூசை செய்தால்
நேரப்பா நின்ற அனுக்கிரகந் நோன்றும்
நினைவாக அனுக்கிரகத்துள்ளே சென்றால்
மேரப்பா அண்டர் பதம் தன்னிலே தான்
மெய்ஞானத் தீபமடா கண்ணில் காணும்
காரப்பா தீபமதை மனக் கண்ணாலே
கருத்தினாலே சொர்க்க பதம் காணலாமே.

காணலாம் சொர்க்க பதம் என்ன வென்றால்
கருவான முக்கோண சிங்கார வீடு
தோணவே அவ் வீட்டில் காணவென்றால்
சுருவமுடன் நவக்கிரகப் பூசை செய்து
பூணவே மூலமதில் வாசி பூட்டிப்
புத்தியுடன் ரவிமதியைக் கண்டு தேறி
பேணவே அனுக்கிரகம் கண்டாயானால்
பெரிதான சொர்க்க பதமதுதான் பாரே.

பாரான மூலமதைக் காண வேணும்
    பதிவான வாசிதனை அறிய வேணும்
நேரான வாசிதனை அறிந்து கொண்டு
    நேமமுடன் சிவயோகஞ் செய்ய வேண்டும்
கூரான சாஸ்திரங்கள் பார்க்க வேணும்
    குறியான தொருகுறியைக் காக்க வேணும்
பேரான மூலமடா ஆறாதாரம்
    பெருமையுள்ள நவகிரகப் பூசை பண்ணே.

பண்ணப்பா நவகிரகப் பூசை தன்னில்
    பதிதான மானதமாம் பூசைகேளு
விண்ணப்பா தானோக்கி மலர்க்கண் சாத்தி
    மேலான இடதுகையில் விபூதி வைத்து
நண்ணப்பா விபூதியை நீ அரைத்து மைந்தா
    நலமான நவரேகை நன்றாய்க்கீறி
முன்னப்பா நடுவான முக்கோணத்தில்
    முதலான விந்து ஓங்காரம் போடே.

போடப்பா ஓங்காரம் அதனுள் மைந்தா
    பொருந்தி நின்ற சுழியெழுதிப் போதமாக
நாடப்பா அஞ்செழுத்தில் மூன்றுங் கூட்டி
    நன்றாக உருச் செபித்து நாட்ட முண்ணி
கூடப்பா வாசியினால் மூலம் பார்த்து
    குருவான பதிநோக்கித் தியானம் செய்து
ஊடப்பா வாசிநின்ற இடத்திலே தான்
    உண்மையுடன் ரேசகபூரகமும் பண்ணே.

பண்ணப்பா கும்பமதில் மனதை வைத்துப்
பதிவான சுழிமுனையைப் பத்தியாக
நண்ணப்பா குருவருளால் பார்த்தாயாகில்
நடுநின்ற ரூபமடா தோணுவது காணும்
முன்னப்பா நின்றதொரு தீபங் கண்டால்
முக்தியுள்ள பூசையடா மௌன பூசை
விண்ணப்பா நிறைந்த தொரு மௌன பூசை
வேதாந்த மானசமாம் பூசைதானே.

தானென்ற மானதமாம் பூசை செய்து
தன்மையுள்ள பூசையை நீ அந்தமாக
கோனென்ற குருவருளால் மெய்யில் பூசி
குணமாகப் பணவெடை உள்ளே கொண்டால்
தானென்ற ஆணவங்கள் அகன்று போகும்
நாதாந்த தேகமது முக்தியாகும்
தேனென்ற அமுர்தரசம் சித்தியாகும்
சிவசிவா சிவயோகத்திலிருந்து பாரே.

பாரப்பா இன்னமொரு கருவைக் கேளு
பரிவான தகட்டில் நவகோணமிட்டு
நேரப்பா நடுவான முக்கோணத்தில்
நிறைந்துநின்ற சுழியெழுதிச்சிகரம் போட்டு
பேரப்பா அஞ்செழுத்தில் மூன்றுங்கூட்டி
பலமாக நூற்றியெட்டு உருவே ஜெபித்து
காரப்பா அத்தகட்டைக் குளிசத்தூட்டி
கருணையுடன் கைதனிலே கட்டிப்பாரே.

கட்டிநன்றாய் விபூதியை நீ பூசினாக்கால்
　　கலந்துநின்ற ரோகமெல்லாம் காணாதோடும்
இஷ்டமுடன் தேகம் வஜ்ஜிர காயமாகும்
　　யேகாதி தோஷமெல்லாம் போட்டோடும்
சட்டமுள்ள நவகிரகஞ் சார்புநலே
　　சகலபிணி விஷமுதலாய்த் தானே தீரும்
திட்டமுள்ள நவக்கிரக தேகமாகும்
　　திருவான அனுக்கிரகம் குருவின் வீடே.

வீடான நவகோணம் இட்டுக்கொண்டு
　　விபரமுடன் நடுவான முக்கோணத்தில்
சூடான அக்ஷரத்தின் பெருமை கேளு
　　சுவுரியென்ற காரியத் தகட்டிலே தான்
வாடாமல் தானெழுதி மைந்தா கேளு
　　வரிசையுடன் எட்டெழுத்தைத் தியானம் பண்ணி
தேடரிந்து சிசுக்களுக்குக் கட்டினாக் கால்
　　தேகத்தில் நின்ற பலதோஷம் போமே.

போமப்பா இன்னமொரு கருமானங் கேளு
　　புத்தியுடன் தாம்பூரத் தகட்டிலே தான்
தாமப்பா தன்னிலையைத் தியானம் பண்ணி
　　சங்கையுடன் கோணமிட்டுக் கொண்டு
ஓமப்பா அக்ஷரந்தான் எட்டெழுத்தை
　　உறுதியுடன் தானெழுதி நடுக்கோணத்தில்
ஆமப்பா ஓம் அம்சிங் கென்றே தான்
　　அழுத்தி மிகத் தானெழுதி அந்தம் பாரே.

அந்தமென்ற சுழுமுனையில் மனக் கண்ணாட்டி
    அன்பு வைத்து சடாக்ஷரந்தன்னை உருவேசெய்து
சௌந்தர்யமுடன் அத்தகட்டைத் தியானம் பண்ணி
    சுருக்காக மானிடர்க்கு கட்டினாக்கால்
பந்தமென்ற மயக்கமோடு பித்தந் தீரும்
    பிசாசு முதல் பில்லி சூனியமும்தீரும்
பந்தமுள்ள காசமுதல் சில விஷங்கள்
    பார்க்குமடா நவக்கிரகப் பதிவினாலே.

பதிவாக இன்னமொரு கருமானங் கேள்
    பரித்தகட்டில் நவகோணம் இட்டுக் கொண்டு
கெதியாக எட்டெழுத்தைச் சுத்திப் போட்டு
    கிருபையுள்ள நடுவான முக்கோணத்தில்
விதியான அக்ஷரந்தான் ஓம் ரீங் கென்று
    விபரமுடன் தானெழுதி விண்ணை நோக்கி
மதியான ரவிமதியைச் சுழுனைக் கேற்றி
    மார்க்கமுடன் சற்குருவைத் தியானம் செய்யே.

செய்யப்பா யெந்திரத்தைக் குளிசஞ் செய்து
    திருவானப் பெண்களுக்குக் கட்டினாக்கால்
மெய்யப்பா சொல்லுகிறேன் கெர்ப்ப ரோகம்
    மெய்யான தேகமாம் வாய்வு தீர்ந்து
கையப்பா உதவுவதுபோல மக்காள் காரிகைக்கு
    கெர்ப்பமுண்டாய்க் கண்ணைக் காண்பாள்
பொய்யப்பா போகாது மெய்யே நிற்கும்
    புத்தியுடன் நவக்கிரகம் பூசை பண்ணே.

பண்ணுவது இன்னுமொரு கருமானங்கேள்
பார் மகனே வெள்ளீயத் தகட்டிலே தான்
தன்னுறுவாய் நின்ற நவகோணமிட்டு
தன்மையுடன் எட்டெழுத்தைச் சுத்திப் போட்டு
கண்ணு மனக் கனிவதனால் முக்கோணத்தில்
கருணையுடன் சிவசிவா ரீங் என்றிட்டு
உண்ணுவது சடாக்ஷரத்தின் உருவே செய்து
உறுதியுடன் மனதறிவால் தியானம் பண்ணே.

பண்ணப்பா குருபரனைத் தியானம் செய்து
பதிவான எந்திரத்தைக் குளிசமாடி
நண்ணப்பா வயல்களிலே அழுத்தினாக் கால்
நன்றாகக் கொளனரி விலகும் பாரு
பெண்ணப்பா திரளாமல் உரு பேதித்தால்
பெண்களுக்கு கட்டினால் நன்மையாகும்
முன்னப்பா நிறைந்த அனுக்கிரகத்தாலே
முக்தி வெகு அதிசயங்கள் இன்னம் கேளே.

இன்னங்கேள் கருமானஞ் சொல்வேனய்யா
ஏகாந்த திருமூலர் கடாக்ஷத்தினாலே
சொன்னமொழி தவறாமல் மனக் கண்ணாலே
சோதியென்ற ரவிமதியை சுழுனைக் கேற்றி
முன்னமே சொன்னதொரு முக்கோணத்தில்
முக்திதரும் வாசியினால் புருவந் தேகி
கண்ணான நவகிரகப் பூசை பண்ணி
கருணையுள்ள நவக்கிரகக் கடாக்ஷம் பாரே.

பாரப்பா வெள்ளி செம்பு தங்கம் மூன்று
பதிவாக உருக்கியதைத் தகடாய்த் தட்டி
நேரப்பா அத்தகட்டில் நவகோணமிட்டு
நேர்மையுடன் எட்டெழுத்தை நினைவாய் நாட்டி
யாரப்பா அறிவார்கள் நடுக்கோணந் தன்னில்
ஆதியென்ற விந்தும் ஓங்காரம் போட்டு
கூறப்பா ஓங்காரம் தன்னில் மைந்தா
குறியாய் சுழியதிலே குணமாய் போடே.

ஏத்தியதோர் ரவிதன்னை உசரயேத்தி
யேகாந்தப் புருவமதின் சுடரில் நின்று
பார்த்திபனே அஷ்டகர்மம் ஆடவென்றால்
பதிவாக சிமகிவகிலியென் றெழுது
ஆத்துமத்தின் செயல் அதனால் அஷ்டகர்மம்
அடங்கி விளையாடுதற்கு இதுவே மூலம்
சாத்தியதோர் மூலமதை வெளியிட்டாக்கால்
தன்னுடலைக் காணாமல் தவிப்பார் பாரே.

பாரப்பா திருமூலர் கடாக்ஷத்தாலே
பதிவான நந்திகுரு வாதம் கண்டு
நேரப்பா கையால் தொழுது நின்றேன் அப்போ
நீ மகனே ஆரெனவே என்றார்யானும்
மேரப்பா மேருகிரி அண்டந் தாண்டி
விளையாடும் திருமூலர் பிள்ளை யென்றேன்
தேரப்பா மனந்தேற்றி திருநீரிட்டு
திருவான அமுர்தரசம் ஈந்தார் தானே.

தானான அமுர்தரசம் ஈந்து நல்ல
    தன்மையுடன் உமதுடைய பேரேதென்றால்
ஊனான மூலமதில் கால் கொண்டேகி
    உறுதியுடன் ருத்திரரைக் கண்டு போற்றி
கோனான குருபதியில் தீபங் கண்ட
    குழந்தையென்ற காலாங்கி யென்றேனப்போ
தேனான அமுர்தரச வசனமாக
    செப்பினார் அஷ்டகர்மம் செயல்தானே.

தானான பெரியோர்கள் அஷ்டகர்மம்
    சங்கதியைப் பாரார்கள் தன்னைப் பார்ப்பார்
வின்னான அயப்பொடியை உச்சாடிப்பார்
    விபரமுடன் நிற்குணத்தை மோகஞ் செய்வார்
கோனான பூரணத்தை வசியஞ் செய்வார்
    கொள்கின்ற இறப்பிறப்பை மாரணிப்பார்
பூனான கோலமதை பேதலிப்பார்
    பொருந்தி நின்ற வாசியை நித்தம்பனஞ் செய்வாரே.

செய்யப்பா தன்னகத்தில் தானே நின்று
    சிவசிவா அஷ்டகர்ம தீர்க்கஞ் செய்வார்
மெய்யப்பா வாசியினால் மூலம் பார்த்து
    விசையான நாலோடெட்டும் தம்பிப்பார்
நைய்யப்பா வென்றதொரு நமன்தான் போவான்
    நல்வினையும் தீவினையும் நமன்தானப்பா
மெய்யப்பா மையமென்ற மூலம் பார்த்து
    மார்க்கமுடன் ஆதார நிலையைப் பாரே.

பாரப்பா ஆதார மூலமான
    பதிவான ஓரெழுத்து உகாரமாச்சு
நேரப்பா உகாரத்தால் வாசியாச்சு
    நிஜமான சோடசமாச்சு உயிருமாச்சு
தேரப்பா மனந்தேறி தெளிவதாச்சு
    சிவசிவா உற்பனமும் ஒடுங்கினமாச்சு
மேரப்பா அண்டர்பதம் தெரியலாச்சு
    வேதாந்த சிவயோகம் விளங்கலாச்சே.

ஆச்சப்பா இன்னமொரு கருவைக் கேளு
    ஆதியென்ற தைலமதில் சவாது கூட்டி
பாச்சப்பா ரெண்டு மூன்றாங் கட்டி மைந்தா
    பத்தியுடன் சிமிழில் வைத்து பதிவாய் நீயும்
காச்சப்பா மூல அனல் சுழினைக் கேத்தி
    கருணையுடன் புருவமதில் திலகம் போட்டு
மூச்சப்பா வாசியினால் சுழினை பற்றி
    மூர்க்கமுடன் சிவயோகத்திருத்து பாரே.

இருந்து நிலையாததினால்மைந்தா கேளு
    இன்பமுடன் உன் சமூகம் கண்டோர்க் கெல்லாம்
விரிந்து நின்ற வியாதியெல்லாம் ஓடிப்போகும்
    மெய்யான பூதகணம் விடுபட்டு ஓடும்
தெரிந்து கொண்டு அந்தநிலை தன்னிலேதான்
    சிவசிவா கர்ப்பூரத் தீபம் பார்த்து
வருந்தி மிக சற்குருவைத் தொழுது கொண்டால்
    வந்துதடா அஷ்டாங்க பரிசை தானே.

தானென்ற வசியமது சொன்னேன் மைந்தா
சார்வான அஞ்சனத்தைச் சாத்தக் கேளு
ஊனென்ற உந்தியிடா மூலம் வாங்கி
உண்மையுடன் சுருக்கி நன்றாய் எடுத்துக் கொண்டு
தேனென்ற நாதமதால் ஆட்டி மைந்தா
சிவசிவா சவாதுலே கூடச் சேர்த்து
நானென்ற ஆணுவத்தை நீக்கி நல்ல
நாட்டமுடன் மத்தித்துச் சிமிழில் தாங்கே

தாக்கி நன்றாய் மூலமதில் வாசி கொண்டு
தன்மையுடன் புருவமதில் திலகம் பொட்டு
நோக்கி நன்றாய் சற்குருவை தியானம் பண்ணி
நுண்மையாய் மேல்கீழும் தன்னைப் பாரு
தாக்கியதோர் வாசியிலே அண்டரண்டாம்
தோணுமடா வெகு நிகழும் காணலாகும்
பாக்கியமாய் அன்னிதியைப் பார்க்க வேண்டாம்
பதிவான கர்ப்பூரத் தீபம் பாரே.

பாரப்பா அஞ்சனத்தின் விவரம் சொன்னேன்
பதிவான மாற்றமதின் செயலைக் கேளு
நேரப்பா மாதுரதி பூக்குங் காலம்
நிஜமான பூவடங்கும் மூன்றாந் திங்கள்
காரப்பா அப்பூவின் பிஞ்சு வாங்கி
கருவொன்று சொல்லுகிறேன் நன்றாய்க்கேள்
சேரப்பா வெல்லமதில் ஆவியைச் சேர்த்து
செம்மையுடன் மாது தனக்கு ஈந்து பாரே.

பாரான மாது தனக்கு ஈந்தாயானால்
பக்குவமாய் காய் வெதும்பி நிலத்தில் விழும்
சீராக அக்காயை வாங்கி மைந்தா
சிவசிவா கருக்கி நன்றாய் வைத்துக் கொண்டு
பேராக்கி வந்ததொரு சீலை தன்னை
பெருமையுடன் கருக்கு நன்றாய் கூடச் சேர்ந்து
நேராக்கி இருவகையும் கூட்டி மைந்தா
நிஜமான காரெள்ளுத் தயிலத் தாட்டே.

ஆட்டி நன்றாய் மையாக்கி வைத்துக் கொண்டு
அப்பனே அதுக்கு நிகர் சவாது கூட்டி
கூட்டியே மத்திச்சு சிமிழில் வைத்து
பூரணமாய் சற்குருவைத் தியானம் பண்ணி
நாட்டியதோர் வாசிதனை புருவத்தேத்தி
நங்கிலி அஞ்சனாதேவி யென்று
தாட்டிகமாய் புருவமதின் சுழினைப் பற்றித்
தன்னறிவை மெய் அறிவில் சாரப் பண்ணே.

சார்வான மூலமதில் கனலைத்தூண்டி
சங்கையுள்ள வாசியினால் சிகரத் தேகி
நேரான புருவமதின் சுழினைப் பற்றி
நின்றால் அங்கு கர்ப்பூர தீபந்தன்னில்
பேரான தீபமதில் அமர்ந்து கொண்டு
பெருமையுடன் சிவயோகத்திருந்தால் மைந்தா
ஆனாலும் உன்னுருவைக் காணமாட்டார்
அவையடக்கம் இருகருவை அடக்கம் பண்ணே.

அடக்கமுடன் இன்னமொரு கருவைக் கேளு
அருமையுடன் உனது உருவைக் காணவென்றால்
அடக்கமதாய் மைவிழித்தி நீருசாத்தி
அப்பவல்லோ உன்னுருவைக் காணலாகும்
அடக்க மென்றால் அடக்கமதாய் இருக்க வேண்டும்
ஆனந்த மதியமுர்தம் கொள்ள வேணும்
விடக்கெடுத்த நாய்போல திரிந்தாலென்ன
வேதாந்த பூரணத்தில் விரும்பி நில்லே.

நில்லென்ற நிலையறியா மாயாவீடு
நிட்டூரமானதொரு நிலையாத தேகம்
ஜில்லென்ற புழு கிருமி சேர்ந்த பாண்டம்
செத்த சவம் போலவே தான் திரியு மஞ்சனம்
மல்லென்று மதம்பிடித்து வாய் வீண் பேசி
மார்க்க நிலை அறியாமல் மாண்டார் கோடி
கள்ளென்ற கள்ளர் வரவு ஆகாதய்யா
கண்மூக்கு மத்தியிலே கருதிப்பாரே.

பாரப்பா இன்னமொரு கருவைக் கேளு
பரம குரு திருமூலர்ப் பாதம் போற்றி
காரப்பா கருவழலை கருவான
நாதவிந்து என்னும் பேராச்சு
நேரப்பா கருவழலை நாதம் நாதம்
நிதமான குருவழலை விந்து விந்து
பேரப்பா நாதமென்ற தைலம் வாங்கி
பேசாத குருவழலை உப்புச் சேரே.

சேரப்பா நாதமதில் அமுரி உம்பு
சேர்த்திடவே நாதமங்கே தெளியும் பாரு
யாரப்பா அறிவார்கள் தெளிவைக் காணார்
அத்தெளிவை அறியாமல் உலகத்துள்ளே
பாரப்பா நாதமதை வாங்கி மைந்தா
பாசமதை அகற்றாமல் பாவிமார்கள்
நேரப்பா கொண்டு திடப் பித்தம் மீறி
நினைவு தப்பிக் காசங் கொண்டு செத்தார் பாரே.

பாரப்பா முன்னர் சொன்ன தெளிவை மைந்தா
பக்தியுடன் குருபரனைத் தியானம் பண்ணி
காரப்பா புருவநடுச் சுழினை போற்றி
கருணையுடன் அமுர்தரசத் தெளிவைக் கொள்ளு
யாரப்பா உனக்கீடு சொல்லப் போறேன்
அருளான தேகமடா அமுர்த தேகம்
மேரப்பா அண்டர்பதம் கண்டதேகம்
வேதாந்த மென்ற தேகமாச்சே.

ஆச்சப்பா மாதமொரு தண்டக்கந்தான்
அப்பனே ஆண்டொன்று கொண்டால் மைந்தா
மூச்சப்பா முன்னிலையாம் விந்து ஏறும்
முடங்காது சதைநரம்பு இறுகிப் போகும்
பேச்சப்பா உன்வசனம் பலிக்கும்
சித்திபெரு லகில் நடத்தை யெல்லாம் மனதில் தோணும்
காச்சப்பா மனக்கசடை மூலத் தீயால்
கசடகத்தி அமுர்தரசம் கனிந்து கொள்ளே.

கனிந்தரசம் தன்னுடனே அண்டம் சேர்த்து
 கூரல் சிவமாலையதாய் நின்றாயாகில்
பணிந்துவிடும் வாசியது தன்னுள் மைந்தா
 பாலகனே கர்ப்பூரத் தேகமாகும்
துணிந்து வரும் யமதூதாள் அகன்று போவார்
 தூரதிருஷ்டி நடத்தையெல்லாம் சொல்லலாகும்
பணிந்து மனக் கண்ணாலே அறிவைப் போற்றி
 பக்தியுடன் இன்னமொரு கருவை கேளே.

கேளப்பா நீலகண்ட வித்தை சொல்வேன்
 கிருபையுள்ள திருமூலர் கடாக்ஷத்தாலே
கேளப்பா செம்பி ரிம் சிம்யென்று
 கெணிதமுடன் அந்திசந்தி உருவே செய்தால்
கேளப்பா நீலகண்ட கெதிகொண்டாடும்
 கேசரத்தில் சதாசிவனும் நர்த்தனஞ் செய்வார்
கேளப்பா தேகம் வச்சிரகாய மாகும்
 கேள்வியென்ன புருவமையச் சுடரைப் பாரே.

பாரப்பா இன்னமொரு கருவைக் கேளு
 பார்னிலே விளளதே பதனஞ்சொன்னேன்
காரப்பா சந்தனத்தின் கட்டைவாங்கி
 கருணையுடன் கட்டையிலே தங்க ஊசி
நேரப்பா கட்டையிலே தமர்கள் போட்டு
 நினைவாகக் கட்டையிலே ஊசி சேர்தது
சேரப்பா ஊசியென்ற ஆணி வதது
 செம்மையடன் சாணைவிலே அரைத்துக்கொள்ளே.

அரைக்கிறது முலைப்பாலால் அரைத்துக் கொண்டு
    உத்தமனே திலகமிட்டு உறுதியாக
திரத்துடனே நீ இருக்கும் போது மைந்தா
    சிவசிவா மனிதர்முதல் மிருகமெல்லாம்
வரத்துடனே உனது பதம் பணியும் மைந்தா
    மார்க்கமுடனுதலதில் குழைத்துப் போட்டால்
கருத்துடனே கணங்களெல்லாம் புத்தி கேழ்க்கும்
    கருணையுடன் நீலகண்ட வித்தை கேளே.

வித்தையென்ன நீலகண்ட மந்திரத்தை
    விபரமுடன் அமாவாசி தன்னில் மைந்தா
சுத்தமுடன் நூத்தெட்டு உருவே செய்தால்
    சுருக்காக சித்திக்கும் நீலகண்டம்
பக்தியுடன் ஆயிரமாம் உருவே செய்தால்
    பாலகனே உனதுடைய நாமஞ் சொல்ல
புத்தியுடன் விசனங்களெல்லாம் தீர்ந்து போகும்
    பொல்லாத அவமிருந்து ஓடும் பாரே.

பாரப்பா தலைகாலாய் மாறினாக்கால்
    பார்விஷம் ஏற்மிடம் இரக்கமில்லை
நேரப்பா கால்தலையாய் மாறினாக்கால்
    நின்ற விஷயம் இறங்குமடா நிஜமாம் வித்தை
காரப்பா விச வித்தை புண்ணியமேயாகும்
    கருத்து வைத்து உருவேரக் கருணை தங்கும்
யாரப்பா அறிவார்கள் நீலகண்டம்
    அறிவான விந்தையடா அதீதமாமே.

ஆமப்பா இன்னமொரு கருவைக் கேளு
    ஆச்சரியம் சொல்லுகிறேன் அதீத மார்க்கம்
நாமப்பா சொல்லுகிறோம் கருங்கல் தன்னில்
    நன்மையுடன் பிரமஞ்சூலம் போட்டு
தாமப்பா நீலகண்ட அயத்தகட்டில்
    சுமையுடன் விந்தெழுதி விந்துக்குள்ளே
ஓமப்பா நீலகண்ட மந்திரத்தை
    உண்மையுடன் தானெழுதி உறுதிகேளே.

கேளப்பா அயத்தகட்டைக் கயில் வாங்கி
    கிருபையுடன் மானதமாம் பூசை செய்து
கேளப்பா சாந்தத்தினால் நன்றாய்க் கட்டி
    கெணிதமுடன் ஓம் சிவாவென்று சொல்லி
கேளப்பா அத்தகட்டை நிலத்துள் வைத்து
    கிருபையுள்ள சூலக்கால் மேலே நாட்டி
கேளப்பா அபிஷேகம் செய்தாயானால்
    கிருபையுள்ள சூலக்கல் களையுண்டாச்சே.

ஆச்சப்பா களைபொருந்தும் சூலக்கல்லை
    அந்திசந்தி கைதொழுது கொண்டோர்க்கெல்லாம்
மூச்சப்பா கொண்டதொரு நோய்கள் தீரும்
    மூர்க்கமுள்ள பிசாசுகள்தான் ஓடிப்போகும்
வீச்சப்பா விஷங்களெல்லாம் விலகிப்போகும்
    வேதாந்த நீலகண்ட விசையினாலே
வாச்சப்பா தலைமுழுகி சூலக்கல்லை
    வந்து கண்டால் சகல விஷம் மாண்டுபோமே.

போமப்பா இன்னமொரு கருமானங்கேள்
முகிதலத்தில் தெய்வமெல்லாம் புத்தி கேழ்க்க
நாமப்பா சொல்லுகிறோம் மைந்தா கேள்
ஓம் கிலி சிவா வெனவே அம்உம் என்று
ஓமப்பா குருத்தோலை தனில் எழுதி
உத்தமனே மானதமாய் பூசைசெய்து
ஆமப்பா பிடாரி அம்மன் துர்க்கை கோயில்
தான்கட்ட நினைத்தபடி ஆடுந் தானே.

ஆடுமப்பா நினைத்தபடி நடந்துகொள்ளும்
அரகரா சீட்டு கேட்டிராமய்யா
ஓடுமப்பா உனதுடைய சீட்டைக் கண்டால்
உலகத்தில் பேய்க்கணங்கள் ஒதுங்கிப் போமே
நாடுமப்பா உனதுடைய ஏவல் கேழ்க்கும்
நன்மையுள்ள குருபதியில் நாட்டமாய் நில்
கூடுமப்பா பிலக்குமடா அந்தக் குரட்டில்
குடியிருந்து ஆடிப்படையைத் தீர்க்கம் பண்ணே.

பண்ணப்பா நவக்கிரகம் பூசை பண்ணி
பதிவான திருவாசி தன்னில் ஏறி
முன்னப்பா நிறைஅந்த அனுக்கிரக வீட்டில்
முழங்கி நின்ற சிலம்பொலியைக் கண்டுதேறி
கண்ணப்பா மனக்கண்ணால் தன்னைப்பாரு
கருணையுள்ள மூலமதில் இறங்கி மைந்தா
உண்ணப்பா மதியமுர்தம் நன்மையாக
உறுதியுடன் கர்ப்பூரத் தீபம் பாரே.

பாரப்பா தீபமென்ற காசி தன்னில்
பதிவான சக்தியென்ற சேதிதானும்
நேரப்பா நின்றதொரு சோதி தானும்
நிலையான குருவிருந்த வீடு தன்னில்
பேரப்பா பெத்ததொரு வீட்டிலேதான்
பலமான ரவிமதியும் இருந்தார் பாரு
யாரப்பா அறிவார்கள் சொல்லக் கேளு
அந்த விட சுழிமுனையை அறிந்துகொள்ளே.

அறிந்து கொண்டு மதிஅமுர்தம் அந்திசந்தி
அருள் பெருகும் பூரணத்தில் மனது வைத்து
வருந்தி அந்த வாசியை நீ புருவத் தேத்தி
மார்க்கமுடன் கர்ப்பூரத் தீபங் கண்டால்
நெரிந்ததொரு வாய்வுயெல்லாம் நேரதாகும்
நின்றதொரு பீடையெல்லாம் ஓடிப்போகும்
பரிந்து மனங்குவிந்து சிவயோகஞ் செய்தால்
பாரு ஞானகேசரி உன்வசம் தானே.

தானென்ற வந்நியடா முக்கோணத்தில்
சார்ந்து நின்ற ரவிமதியை என்ன சொல்வேன்
கோனென்ற குருவருளாங் கேளு கேளு
குவிந்து இடை பின்னாகி சுழினைக் கேகி
வானென்ற அண்டமதில் தீபமாகி
வளர்ந்து சுடர்பிரான சிவயோகந்தானும்
தேனென்ற சிவயோகம் செய்யலாச்சு
தேவி மனோன்மணி அமுர்தம் இயலைப்பாரே.

பாரப்பா மூலிகையில் சித்துக் கேளு
பதிவான காந்தியடா விஷ்ணு காந்தி
நேரப்பா காந்தி நின்ற இடத்தில் மைந்தா
நீ மகனே வடமுகமாய் இருந்து கொண்டு
காரப்பா நம நம சிவ என்றே தான்
கருணையுடன் வேரெடுத்து மஞ்சள் பூசி
சேரப்பா நூல் அதனால் சுத்தி மைந்தா
சிசுக்களுக்குக் கட்டினால் செம்மையாமே.

செம்மையென்ன சுரதோஷம் விட்டுப்போகும்
தீராத தேகவலி வாங்கிப் போகும்
தன்மையுடன் இன்னமொரு கருவைக் கேளு
சங்கையுள்ள சூரியடா நத்தைச்சூரி
உண்மையுடன் சமூலமதை வாயில் போட்டு
ஒதுக்கி நன்றாய் இருபுறமும் மென்றாயாகில்
நன்மையுடன் தந்தமெல்லாம் இறுகிப் போகும்
நயனமதில் தெளிவுதரும் நன்மையாமே.

ஆமப்பா இன்னமொரு கருவைக் கேளு
அப்பனே நெல்லியடா கீழ்க்காய் நெல்லி
தாமப்பா சமூலமதை வாங்கி மைந்தா
தன்மையுடன் நறுக்கி நன்றாய் வாய்நீர் விட்டு
நாமப்பா சொல்லுகிறோம் கண்ணிலே தான்
நயமாகத் தான் பிழிந்து ஊதிப் போட்டால்
ஓமப்பா சதைபடரும் நெரிசூலை
ஓடிவிடும் கணம் தெளிவுடனே ஆகும்.

ஆமப்பா இன்னமொரு சூட்சஞ் சொல்வேன்
    அரிதரிது பொடுதலையை வாயில் போட்டு
தாமப்பா தின்றுவிடு ஈரைஞ்சு நாள்
    பக்தி கெட்டு ஓடுமடா பவுத்திரந்தான்
நாமப்பா சொல்லுகிறோம் நல்ல பிரயோகம்
    நாட்டமுடன் இக்கருவை வெளிவிடாதே
ஓமப்பா ஒருமனதாய் மூலம் பார்த்து
    உறுதியுடன் நின்றதினால் உறூதியாமே.

உறுதியுடன் இன்னமொரு கருவைக் கேளு
    உத்தமனே வெள்ளருகு கொண்டு வந்து
உறுதியுடன் உணர்த்தி நன்றாய்த் தூளாய்ப் பண்ணி
    உத்தமனே அந்தி சந்தி இருபொழுது உண்ண
உறுதியுடன் நின்றதொரு மூலமெல்லாம்
    முடிந்து போகுமடா உண்மை உண்மை
உறுதியுடன் மனதறிவாய்ச் செய்தாயாகில்
    உத்தமனே நவமூலம் ஓடிப்போமே.

போகுமடா இன்னமொரு சூட்சங் கேளு
    புத்தியுடன் கள்ளியுடப் பட்டை வாங்கி
வாகுடனே மிளகு வெள்ளைப் பூண்டு கூட்டி
    அரைத்துருட்டிப் பத்து நாள் கொள்ள மைந்தா
நோக்கி நின்ற அஷ்டகுன்மம் ஓடிப் போகும்
    உண்மையுள்ள வைத்தியமடா சிமிட்டு வித்தை
பாருடைய குரு நான் சொன்ன வித்தை
    பக்குவத்தை நன்றாகப் பணிந்து செய்யே.

செய்யவே இன்னமொரு சூட்சங் கேளு
　செம்மையுடன் கிராம்புதனை பழச்சாத்தாலே
நைய்யவே அரைத்துருட்டி மைந்தா கேளு
　நாட்டமுடன் சுண்டக்காய் வீதமாகப்
பெய்யவே அந்தி சந்தி கொண்டால் மைந்தா
　பரக்குமா கிராணியென்ற தெல்லாம் போகு
கையாற் கண்ட இந்தப் படிதான் மைந்தா
　கருணையுடன் நஹ்றிர்த்துச் சித்துக் கேளே.

கேளடா உந்தியிலே சிவமும் சக்தி
　கெணிதமுடன் நின்ற இடம் துரியவீடு
கேளடா அவ்வீட்டில் மனதை வைத்து
　கிருபையுடன் புருவ நடுச் சுழியில் நின்று
கேளடா சிவயோகம் செய்யும் போது
　கேள்வியென்ன மானிடர்கள் வருத்தமென்றால்
கேளடா சொன்னவனைப் பார்த்து மைந்தா
　கீழும் மேலும் பார்த்து மெல்ல ரேசித்தூதே.

ரேசித்து ஊதிடவே வியாதியெல்லாம்
　நிமைக்கு முன்னே ஓடிவிடும் மைந்தா கேளு
நேசித்து வாசியுட காலால் மைந்தா
　நெடுந்தூரம் சென்று விளையாடலாகும்
பூசித்து வாசியை நீ அறிய வேணும்
　புத்தியுடன் சிவயோகம் செய்ய வேணும்
வாசித்த நூல்முறைகள் அறிய வேணும்
　வகையுடனே மரணத்தில் மருவிநில்லே.

மருவயிலே ரவி மதியும் சுழினை மூன்றும்
    வாய் அதிர்ந்து பேசாத மனதில்காணும்
அருவையிலே சகலமெல்லாம் ஒன்றுக்குள்ளே
    அகண்ட பரிபூரணமாய் நிற்கும்கால்
திருவையிலே பளிச்சென்று ஒளிதான் வீசும்
    திருவாகி வாசியென்ற இயல்தான் மைந்தா
பருவமுடன் ஆதார மூலம் பார்த்து
    பக்தி கொண்டு புருவமதில் பணிந்து நில்லே.

பணிந்து நின்ற மூலமதில் நாதன் கண்டு
    பதிவான நாதமென்று ஒளியில் சென்று
கனிந்து தனையிருந்ததொரு சிகார வீட்டில்
    சாராமல் ரவிமனையில் சார்ந்து கொண்டு
துணிந்து மனகனிவதனால் அமுர்தம் கொண்டால்
    குறைவின்றி வீரமென்ற தேகமாமே.

ஆமப்பா தேகமதைக் கண்ட பேர்கள்
    அருளான போதமென்பார் பிரமமென்பார்.
தாமப்பா சச்சிதானந்த மென்பார்
    சார்வான வெளியென்பார் ஒளியேயென்பார்
வாமப்பால் கடந்த பூரணமே யென்பார்
    சுத்த ஜோதியெனவே மகிழ்வார் பாரே.

பாரப்பா பூரணத்தின் பெருமை சொல்ல
　பதிவான கதிரேது மதியங்கேது
நேரப்பா தீயேது அப்புவேது
　நிறைந்த தொரு வாய்வு ஆகாசமேது
சாரப்பா மண்ணேது விண்ணங்கேது
　சார்வான ஒளியேது வெளியங்கேது
பேரப்பா பெருகியெங்கும் தானாய்
　பெருகி நின்ற பூரணத்தின் பெருமைதான்.

தானான பூரணத்தை அறியவேணும்
　தன்மையுடன் அதில் மனதை நிறுத்தவேணும்
தேனான குருவருளைக் காணவேணும்
　குவிந்தமர் அமுர்தரசம் கொள்ளவேணும்
தேனானஅமமுர்தரசங் கொண்டு மைந்தா
　திருவான போதையிலே தீர்க்கவேணும்
ஊனான போதையில் திரமாய் நின்று
　உடல் உயிரை அறிந்து மனங் கொடுக்கும் பாரே.

பாரப்பா மனங் கொடுக்கும் நிலையில் நின்று
　பருதிமதி சுடர்தனைப் பார்த்து மைந்தா
நேரப்பா நின்றதொரு வாசியாலே
　நீ மகனே ருத்திரனார் பதியில் சென்று
சாரப்பா மயேஸ்பரத்தில் வலக்கால் நீட்டி
　சார்வான இடக்காலை சுழினைக் கேத்தி
காரப்பா அச்சுழியில் நின்று கொண்டு
　கண்ணடங்காத் தீபமதைக் காண முத்தே.

**காலாங்கி நாதர் பூஜாவிதி முற்றும்.**